முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சச்சிதானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

26.03.2019, செவ்வாய்க்கிழமை

1. **மலரட்டும் சுத்த ஞான யுகம்**
**மக்களிடை வளரட்டும் சைவநெறி**
**வளரட்டும் அரங்கன் சன்மார்க்கம்**
**வையகம் ஒளிரட்டும் ஒங்கார நெறிபட**
2. நெறிமிக்க அரங்கன் கொள்கையே
நிலவுலகை மாற்றும் எனக் கூறி
தெரிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி
தேசிகனுக்கு **விளம்பி சேல் திங்கள்**
3. **திங்களிலே வியதிகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 12ம் நாள் 26.03.2019, செவ்வாய்க்கிழமை)**
**தெரிவிப்பேன் சச்சிதானந்தர் யானும்**
ஓங்காரக்குடிலின் செயல்பாடுகள்
உலகை மாற்றும் சேவைகளாகயிருக்க
4. இருக்கவே எங்கெல்லாம் அரங்கன்
இணையிலா தருமம் வளர்கிறதோ
கருத்தாக அங்கெல்லாம் மாற்றம்
கந்தவேலன் நடத்தி வருவாரப்பா
5. அப்பனே அரங்கா முருகா என
அழைப்பாக எங்கெல்லாம் செபதபம்
ஒப்புக்கொண்டு நடத்தப்படுகிறதோ
ஓங்காரன் அங்கெல்லாம் இறங்கி
6. இறங்கி காப்புதனை தந்து
இணையிலா அருள் புரிந்திட
வரங்கள் பெற்று வந்தநல்
வள்ளல் அரங்கன் மலரடி பணிய
7. பணிவுடன் தீட்சை ஏற்று
பயபக்திபட தருமத்தில் உதவி
துணிவுபட கொள்கை பரப்பி
தொண்டராகி தொடர்ந்து வர
8. வருகவே கலிகால இன்னல்
வையத்தை விட்டு விலகுமப்பா
தரும வழி தருகின்ற பலத்தால்
தயவான உண்மை செயல்பாட்டால்
9. செயல்பாட்டால் உலகே அமைதி பெறும்
சேவையதன் வளர்ச்சி ஓங்கிட
தயவுபட இயற்கையும் இறங்கி
தரணியில் நீர் ஆகார குறைவு என்பதில்லா

10. இல்லாத சூழல் முழு நிறைவுபட
எங்கும் மழை வளம் பெருகி
வல்லமையான பொருள் வளமும்
வளர்ச்சியும் மேன்மையும் கண்டு

11. கண்டுமே கலியுகமே மாறும்
கந்தவேலன் அருளால்
உண்டாகும் ஞான யுகமாற்றம்
உரைத்திட்ட நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சச்சிதானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

உலகினில் விரைந்து மலரட்டும் சுத்த ஞானயுகம், மக்களிடையே விரைந்து வளர்ந்து ஓங்கட்டும் சுத்த சைவநெறி, உலகமெங்கும் வளரட்டும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தூய சன்மார்க்க நெறி, உலகம் அருள் ஒளியில் ஒளிரட்டும், ஓங்கார நெறியாம் முருகப்பெருமானின் ஞானநெறியினால் நெறிமிகுந்த தூய்மையான அரங்கனின் ஞானக் கொள்கைகள் இந்த உலகினை மாற்றும் எனக் கூறியே உலக நலன் கருதியே **விளம்பி வருடம் பங்குனி மாதம் 12ம் நாள் 26.03.2019, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே சச்சிதானந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சச்சிதானந்தர்.

உத்தம மகா ஞானியின் ஏழாம் படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடிலின் செயல்பாடுகள் எல்லாம் உலகையே மாற்றும் வல்லமைமிக்க செயல்பாடுகளாய் இருக்கின்றதப்பா. ஆதலினால் உலகினில் எங்கெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஈடு இணையற்ற தருமச்செயல்கள் வளர்கின்றதோ அங்கெல்லாம் உறுதியாக முருகப்பெருமான் பல நல்ல மாற்றங்களை நடத்தி வைப்பார்.

அப்பனே முருகா அரங்கா என்றே அரங்கனை உலகினில் எங்கெல்லாம் மனம் உருகி அழைக்கின்றார்களோ, எங்கெல்லாம் அழைத்து பூஜைகளை உண்மையுடன் நடத்தப்படுகிறதோ அங்கெல்லாம் முருகப்பெருமான் இறங்கி அருள் பாதுகாப்பினை தந்து இணையற்ற வகையிலே அருள் புரிந்திடுவார்.

அருள் பாதுகாப்பை தந்து அருள் புரிந்திடவே வரங்கள் பலவாறாய் பெற்று வந்த நல்ஞானி வள்ளல் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருமலரடிகளிலே பயபக்தியுடன் பணிந்துவிட, பணிந்து தீட்சை உபதேசங்களை அடைந்து பயபக்தியுடன் ஆங்கே நடக்கின்ற அன்னதானப் பணிகளுக்கு பொருளுதவிகள் செய்து அரங்கனின் உண்மை ஞானநெறிக் கொள்கைகளை ஏற்று துணிவுடன் உலகினில் பரப்பி தொண்டர்களாக ஆகி அரங்கனை பின்தொடர்ந்து வரவர, கலியுகத்தின் துன்பங்களெல்லாம் இவ்வுலகையே விட்டு விலகுமப்பா. தர்மத்தினால் தர்மவழிகளிலே செல்வதினால் தர்மவழி தருகின்ற தர்மபலத்தால் தயவுமிக்க உண்மையான செயல்பாடுகளினால் இந்த உலகமே அமைதி பெறும். மக்களின் சேவைகள் வளர்ச்சி பெருகிட இயற்கையும் தயவுடன் கருணையோடு நடந்து தண்ணீர் பஞ்சம் இல்லாமல் உணவு பஞ்சம் இல்லாது அருளி நல்ல சூழ்நிலை உலகில் உருவாகி உலகமெங்கும் மழை வளம் பெருகி நிறைவுபட வல்லமையான பொருள்வளமும் வளர்ச்சியும் மேன்மையும் பெற்று இந்த கலியுகமே மாற்றம் அடையும் முருகப்பெருமானின் அருளினால், ஞானபண்டிதன் தலைமையில் முருகப்பெருமானின் அருளால் இந்த உலகினில் ஞானயுக மாற்றம் உருவாகிடும் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் கூறுகிறார் மகான் சச்சிதானந்தர்.

–சுபம்–